“தர்மம் சர,,

செப்டம்பர் (15 .9. 2026) • கும்பகோணம் • பிரதி-25

ப்ரஹ்மஶ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்



விவாஹம் விவாஹத்தின் நோக்கம் (தர்மமும் சந்ததியும்)

ஸப்தபதியின் நிறைவு – வாழ்நாள் நட்பும் இணைந்த வாழ்க்கையும் ஸப்தபதியில் ஏழு அடிகளை இணைந்து எடுத்து வைத்த பின்னர், மணமகனும் மணமகளும் ஒருவருக்கொருவர் வாழ்நாள் துணையாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். திருமணம் என்பது இரு தனி மனிதர்களின் இணைவு மட்டுமல்ல; தர்மம், அன்பு, குடும்பப் பொறுப்பு, சந்ததி, பரஸ்பர மரியாதை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்வுப் பயணம் ஆகும்.

ஸகா ஸப்தபதா பவ । ஸகாயௌ ஸப்தபதா பபூவ ।
ஸக்யம் தே கமேயம் । சக்யாத் தே மாயோஷம் சக்யாந் மே மாயோஷ்டா: ॥

பொருள்:

“இந்த ஏழு அடிகளையும் என்னுடன் இணைந்து நடந்ததால், நீ எனது நண்பனாகவும், வாழ்க்கைத் துணையாகவும் ஆனாய். நாம் இருவரும் வாழ்நாள் முழுவதும் நல்ல நண்பர்களாகவும், அன்புடனும் ஒற்றுமையுடனும் இணைந்து வாழ்வோமாக. நம் நட்பு என்றும் நிலைத்திருக்கட்டும்.” இங்கு “ஸகா” – நண்பன் என்ற சொல் மிகவும் சிறப்புடையது. கணவனும் மனைவியும் ஒருவர் மீது ஒருவர் அதிகாரம் செலுத்துபவர்களாக அல்லாமல், வாழ்க்கையின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் உற்ற நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதே இதன் உயர்ந்த கருத்தாகும்.

தம்பதிகளின் கடமை

விவாஹத்திற்குப் பின்னர் கணவனும் மனைவியும் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டும் நடத்தாமல், குடும்பம் மற்றும் சமுதாயத்தின் நலனுக்காக இணைந்து செயல்பட வேண்டும். ஒருவரின் குறைகளை மற்றவர் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டு, நற்குணங்களை வளர்த்துக் கொள்ள உதவ வேண்டும்.

“ஸமஞ்ஜந்து விஶ்வே தேவா: ஸமாபோ ஹ்ருதயானி நௌ ।
ஸம்மாதரிஷ்வா ஸந்தாதா ஸமுதேஷ்ட்ரீ ததாது நௌ ॥”

பொருள்:

“அனைத்து தெய்வங்களும் எங்கள் இருவரின் மனங்களையும் ஒன்றிணைக்கட்டும். நீரின் ஒற்றுமையைப் போல எங்கள் இதயங்கள் ஒன்றாகட்டும். எங்கள் எண்ணங்களும் நோக்கங்களும் ஒன்றுபட்டு, நாங்கள் ஒருவருக்கொருவர் துணையாக வாழ அருள் புரியட்டும்.” இதன் மூலம் திருமண வாழ்க்கையின் அடிப்படை “மன ஒற்றுமை” என்பதை வேதம் வலியுறுத்துகிறது. ஒரே வீட்டில் வாழ்வது மட்டும் தாம்பத்தியம் அல்ல; ஒரே நோக்கத்துடன், ஒருவரின் மனதை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வதே இல்லறத்தின் சிறப்பு.

தொடரும் .

ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்

ராணி துர்காவதி



ராணி துர்காவதி இந்தியாவின் இடைக்கால வரலாற்றில் போற்றத்தக்க மாவீரர்களில் ஒருவராவார். கோண்ட்வானா பகுதியின் (தற்போதைய மத்தியப் பிரதேசம்) மகாராணியாக விளங்கிய இவர், நாட்டின் சுதந்திரத்திற்காகவும், தன் மக்களின் நலனுக்காகவும் போர்க்களத்தில் வீர மரணம் அடைந்த தைரியமிக்க பெண்மணியாவார்.

பிறப்பும் இளமையும்

ராணி துர்காவதி 1524 ஆம் ஆண்டு அக்டோபர் 5 ஆம் நாள் உத்தரப் பிரதேசத்தில் உள்ள மஹோபா என்னுமிடத்தில் சந்தேல வம்சத்தின் புகழ்பெற்ற மன்னரான கீர்த்தி சிங் சண்டேல் என்பவரின் மகளாகப் பிறந்தார். இவர் இயற்கையிலேயே அழகும், கூர்மையான புத்தியும், இணையற்ற போர்க்குணமும் கொண்டவராக வளர்க்கப்பட்டார். வாள்வீச்சு, வில்வித்தை, குதிரையேற்றம் மற்றும் ராணுவ உத்திகள் ஆகியவற்றில் சிறுவயதிலேயே சிறந்து விளங்கினார்.

திருமணமும் ஆட்சியும்

1542 ஆம் ஆண்டில், கோண்ட்வானா பகுதியின் கார்ஹா-மண்டலா பேரரசின் மன்னரான சங்கர ஷா என்பவரின் மகன் தல்பத் ஷாவைத் திருமணம் செய்து கொண்டார். இந்தத் தம்பதியினருக்கு வீர் நாராயண் என்ற மகன் பிறந்தார். துரதிர்ஷ்டவசமாக, திருமணமான சில ஆண்டுகளிலேயே தல்பத் ஷா காலமானார். இதனால் இளம் வயதிலேயே ராணி துர்காவதிக்கு நாட்டின் முழுப் பொறுப்பும் வந்து சேர்ந்தது. தன் பச்சிளம் மகன் வீர் நாராயணை அரியணையில் அமர்த்திவிட்டு, அவனுக்குப் பாதுகாவலராக இருந்து திறம்பட ஆட்சி நடத்தத் தொடங்கினார்.

திறமையான நிர்வாகம்

ராணி துர்காவதியின் ஆட்சி காலம் கோண்ட்வானா மக்களின் பொற்காலமாகக் கருதப்பட்டது. இந்து தர்மத்தை நிலைநாட்டப் பாடுபட்ட ஒரு வரலாற்று பெண்மணியாவார். தன் ராஜ்யத்தை பல்வேறு நல்நிர்வாகச் சீர்திருத்தங்கள் மூலம் மேம்படுத்தினார். கலை மற்றும் இலக்கியத்திற்கு ஆதரவளித்தார். துர்காவதி தனது புத்திகூர்மை மற்றும் மக்கள் நலப் பணிகளால் மக்களின் பேரன்பைப் பெற்றார்.எண்ணிக்கையிலும் ஆயுதங்களிலும் பலம் வாய்ந்த முகலாயப் படைகளை, ராணி துர்காவதி மிகக் குறைந்த வீரர்களைக் கொண்டு துணிச்சலுடன் எதிர்கொண்டார். 'சரண் வான்' பள்ளத்தாக்கில் நடைபெற்ற கடுமையான போரில் முகலாயர்களுக்குப் பலத்த அடி கொடுத்தார். போர்க்களத்தில் 'சார்மண்' என்ற தனது குதிரையின் மீது ஏறி நின்று 'மகிளாவதி' என்ற வாளைச் சுழற்றிப் போரிட்டார்.

இந்தப் போரின் ஒரு கட்டத்தில் ராணி துர்காவதியின் கழுத்தில் அம்பு பாய்ந்து பலத்த காயம் ஏற்பட்டது. எதிரிகளிடம் பிடிபடுவதை விட தன்மானத்துடன் இருக்க வேண்டும் என்று கருதிய ராணி, தன் வாளாலேயே தன் உயிரைத் தியாகம் செய்து கொண்டார். 1564 ஆம் ஆண்டு ஜூன் 24 அன்று அவர் வீரமரணம் அடைந்தார்.ராணி துர்காவதி இந்தியாவின் பெண் சக்தியின் அடையாளமாகவும், தியாகம் மற்றும் தேசப்பற்றுக்கான இலக்கணமாகவும் திகழ்கிறார். தன் நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுக்காமல் கடைசி மூச்சுவரை போராடிய அவரது வாழ்க்கை வரலாறு என்றென்றும் போற்றத்தக்கதாகும்.

लोकाः समस्ताः सुखिनो भवन्तु ॥ தொடரும்



“அடிப்படை தர்மங்கள்”

வித்வான் விரூபாக்ஷ சர்மா

க்ஷுத் வ்யாதிச்ச சிகித்ஸ்யதாம்
ஸ்வாத் வன்னம் ந து யாச்யதாம் !
விதிவசாத் ப்ராப்தேந ஸந்துஷ்யதாம்

பசி என்கிறது ஒரு வியாதி மாதிரி. வியாதிக்கு மருந்து ‘டோஸேஜ்’ பிரகாரம்தானே சாப்பிடுவோம்? கொஞ்சங்கூட அதிகம் சாப்பிடமாட்டோமல்லவா? அதே மாதிரி பசி என்கிற வியாதிக்குச் சிகித்ஸையாக மருந்து மாதிரி உணவு உட்கொள்ள வேண்டும். இப்படித்தான் ஆசார்யாள் உபதேசம் பண்ணியிருக்கிறார். அதாவது, பசி நோய்க்கு மருந்தே சாப்பாடு என்று ஆக்கிக்கொள்ளு. நாக்குக்காகத் சாப்பிடாதே ! ருசிருசியான அன்னமாகத் தேடாதே – விதி வசமாக எது கிடைக்கிறதோ அதிலே த்ருப்தியாயிரு – என்று நல்வழி காட்டுகிறார்.



ஸ்ரீ சர்மா சாஸ்திரிகள்

ஸத் ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்

‘ஸத்ஸங்கம்’ என்பதற்கு இன்னொரு அர்த்தம் சொல்லலாம். ஸத்வஸ்து என்பது எக்காலும் மெய்ப் பொருளாயிருக்கும் ஆத்மா ஒன்றுதான். தேஹாத்ம புத்தியை நீக்கி அந்த ‘ஸத்’ தான நிஜ ஆத்மாவில் சேர்வதுதான் ‘ஸத்ஸங்கம்’.

இப்படியே God-thoughtலிருந்து no-thought உண்டாகும்.

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

ॐतन्निष्ठस्य मोक्षोपदेशात्-

அத்வைத கதைகள்

ஓம் தந்நிஷ்டஸ்ய மோக்ஷோபதேசாத்

பயணமும் நிஷ்டையும்

சத்யன் ஒரு சிறிய படகில் ஏறினான். அவன் கவனம் முழுவதும் அந்தத் தூரத்து ஒளியின் மீதே இருந்தது. கடல் அலைகள் அவனை அலைக்கழித்தன. இருட்டு பயமுறுத்தியது. இடையிடையே அழகான சில தீவுகள் தெரிந்தன, அவை அவனை திசைதிருப்ப முயன்றன. ஆனால் சத்யன் 'தந்நிஷ்டன்' ஆக இருந்தான். அதாவது, "அந்த ஒளியைத் தவிர எனக்கு வேறு கதியில்லை" என்ற உறுதியோடு இருந்தான். அவன் மனம் அந்த ஒளியோடு ஒன்றிப்போனது. ஒரு கட்டத்தில், அவனுக்கும் அந்த ஒளிக்கும் இடையில் இருந்த இடைவெளி மறைந்துவிட்டது போல உணர்ந்தான். அவனது ஒவ்வொரு துடுப்பு வீச்சும் அந்த ஒளியின் வழிகாட்டுதலின்படி அமைந்தது.

சூத்திரத்தின் உண்மை

இங்கேதான் அந்தச் சூத்திரம் வேலை செய்கிறது. சத்யன் ஒரு ஜடமான கல்லையோ அல்லது அறிவற்ற பொருளையோ நம்பித் தன் வாழ்வை ஒப்படைக்கவில்லை. அவன் நம்பியது ஒரு மாபெரும் சக்தியை (பரம்பொருளை).வேதங்கள் சொல்கின்றன: "யார் அந்தப் பரம்பொருளிடம் பக்தி கொண்டு நிலைபெறுகிறார்களோ, அவர்களுக்கு மோக்ஷம் உண்டு."

சிந்தனை: ஒரு ஜடமான பொருள் (அறிவற்ற இயற்கை) எப்படி ஒருவனுக்கு முக்தியை அளிக்க முடியும்? ஒரு மரக்கட்டை தானாக ஒருவனை கரை சேர்க்க முடியாது. ஆனால், அறிவுள்ள ஒரு வழிகாட்டியால் (பரம்பொருளால்) மட்டுமே ஒருவனைத் தன்பால் ஈர்த்து முக்தி அளிக்க முடியும்.

கரை சேர்தல்

சத்யன் இறுதியாக அந்த 'பேரின்பக் கரையை' அடைந்தான். அங்கே சென்ற பிறகுதான் அவனுக்குப் புரிந்தது, அவன் இவ்வளவு காலம் பார்த்த அந்த ஒளி, அவனுக்கு வெளியிலிருந்து வரவில்லை; அது அவனது ஆத்மாவிலேயே இருந்தது. அவன் அந்த ஒளியில் நிலைத்திருந்ததால் (தந்நிஷ்டை), அவனது அறியாமை இருள் நீங்கி முக்தி கிடைத்தது.

தொடரும்

“ஸம்சய நிவ்ருத்தி”
தர்ம சாஸ்த்ர மற்றும் ஆன்மீக தொடர்பான கேள்விகள் வரவேற்கபடுகின்றன .8838515265-என்ற வாட்சப் எண்ணிற்கு உங்கள் பெயர் ஊர் பெயருடன் அனுப்பவும்.

“ஸம்சய நிவ்ருத்தி”

குலதெய்வ வழிபாட்டை திருமணத்திற்குப் பிறகு கணவன்–மனைவி எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்? மனைவி தனது பிறந்த வீட்டுக் குலதெய்வத்தையும் வழிபடலாமா?

திருமணத்திற்கு பிறகு மனைவி கணவனின் குலதெய்வத்தை பின்பற்ற வேண்டும் . தனது பிறந்த வீட்டுக் குலதெய்வத்தை வழிபடுவதால் தவறும் ஒன்றும் இல்லை

நமது பாடசாலையில் ஸ்ரீஸுக்த ஹோமம் , மற்றும் ஷ்ராவணம் நன்கு நடைபெற்றது





